©
GOVERNMENT OF TAMIL NADU
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

## EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 141] CHENNAI, WEDNESDAY, MAY 18, 2011
Vaikasi 4, Thiruvalluvar Aandu–2042

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

#### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர், தஞ்சாவூர்.**

**தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு ஊராட்சி ஒன்றியம், மகாராஜபுரம் கிராம ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க. எண் 4083/2010/அ3)*

**No. VI(2)/281(b)/2011.**

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு ஊராட்சி ஒன்றியம், மகாராஜபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. டி. கலியமூர்த்தி என்பவர் அவ்வூராட்சியின் நிர்வாக அலுவலர் என்ற முறையில் செயல்படும் போது ஊராட்சியில் நிதி மற்றும் நிர்வாக முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக ஆய்வில் கண்டறியப்பட்டு, 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 205–ன்கீழ் அன்னாருக்கு விளக்கம் கோரும் அறிவிப்பு வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஊராட்சி மன்றத் தலைவர் அவர் மீதான குற்றச்சாட்டுகளுக்கு தனித்தனியே தனது விளக்கத்தினை அளித்துள்ளார். ஊராட்சி மன்றத் தலைவர் மீதான குற்றச்சாட்டுகள் அவற்றிற்கு அவர் அளித்துள்ள விளக்கங்கள் அலுவலக ஆவணங்கள் ஆகியன விதிமுறைகளுடன் ஆய்வு செய்யப்பட்டு விளக்கங்கள் ஏற்கக் கூடியதாக இல்லை. எனவே, 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 205 (2)–ன்படி மகாராஜபுரம் கிராம ஊராட்சித் தலைவர் திரு. டி. கலியமூர்த்தி என்பவரின் நிர்வாகத்தில் காணப்பட்ட முறைகேடுகள் தொடர்பாக அவரை மகாராஜபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டு, இதுகுறித்து அந்த கிராம ஊராட்சியின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக மகாராஜபுரம் கிராம ஊராட்சி உறுப்பினர்களின் கூட்டத்தினை அவ்வூராட்சி மன்ற அலுவலகத்தில் நடத்திட திருவையாறு வட்டாட்சியருக்கு உத்தரவிடப்பட்டது.

அதன்படி திருவையாறு வட்டாட்சியர் 16–12–2010 அன்று பிற்பகல் 2–00 மணிக்கு மகாராஜபுரம் ஊராட்சி மன்றக் கூட்டத்தினை நடத்தியுள்ளார். கூட்டத்தில் மகாராஜபுரம் ஊராட்சியில் உள்ள 9 உறுப்பினர்களில் திரு. என். வெற்றிவேல் (1–வது வார்டு) மற்றும் திரு. ஆர். சிவக்குமார் (2–வது வார்டு) ஆகிய இருவரைத்தவிர மற்ற உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சி மன்றத் தலைவர் கலந்துகொண்டுள்ளனர். கூட்டத்தில் ஊராட்சி மன்றத் தலைவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அதற்கான விளக்கம் ஆகியவற்றை கலந்துகொண்ட அனைத்து உறுப்பினர்களும் வட்டாட்சியர் படிக்க கேட்டறிந்து கொண்டு, ஊராட்சி மன்றத் தலைவர் அளித்துள்ள விளக்கங்களின்படி முறைகேடு ஏதுமில்லை என்றும், ஊராட்சி மன்றத் தலைவரை பதவி நீக்கம் செய்யும் ஊராட்சிகளின் ஆய்வாளரின் யோசனையை நிராகரித்தும் கருத்து தெரிவித்திருந்தனர்.

குற்றச்சாட்டுகள், அவற்றிற்கான ஊராட்சி மன்றத் தலைவரின் விளக்கங்கள் மற்றும் மகாராஜபுரம் ஊராட்சி மன்ற உறுப்பினர்களின் கருத்து ஆகியவை பரிசீலிக்கப்பட்டன. ஊராட்சியின் செயல் அலுவலராகிய ஊராட்சி மன்றத் தலைவர் தனது கட்டாய மற்றும் அடிப்படை கடமைகளிலிருந்து தவறி, அரசினால் ஊராட்சியின் வளர்ச்சிக்கு வழங்கப்படும் நிதிகளில் முறைகேடுகள் செய்தும் அரசு விதிமுறைகளை மீறி மிகைச் செலவினங்கள் செய்தும், முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளதும் பொது மக்களுக்கான நிதி வீணாக்கப்பட்டுள்ளது உறுதியானதால் இது குறித்த ஊராட்சி மன்ற உறுப்பினர்களின் கருத்து ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

இந்நிலையில், 19—08—2009 தேதிய சென்னை உயர்நீதிமன்ற முழு நடுவர் ஆயத்தின் தீர்ப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையின்படி, மகாராஜபுரம் ஊராட்சி மன்றத்தின் கருத்துகளுக்கு மாறாக, ஊராட்சி மன்றத் தலைவரை பதவி நீக்கம் செய்ய வேண்டிய அவசியத்தின் காரணங்களை ஊராட்சி மன்றத் தலைவர் திரு டி. கலியமூர்த்தி என்பவருக்கு மறு விளக்கம் கோரும் அறிவிப்பு 17—02—2011 அன்று சார்வு செய்யப்பட்டு அதற்கு 28—02—2011 தேதிய கடிதத்தில் மறுவிளக்கம் சமர்ப்பிக்க வேண்டிய நிலையில் மேற்கொண்டு மேலும் 15 தினங்கள் கால அவகாசம் வழங்க கேட்டு கடிதம் அனுப்பியிருந்தார். மேலும் 16—02—2011 தேதிய கடிதத்தில் தனது மறுவிளக்கத்தை சமர்ப்பித்திருந்தார்.

அன்னார்மீது பிறப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள், அதற்கான ஊராட்சி மன்றத் தலைவரின் விளக்கங்கள், திருவையாறு வட்டாட்சியரால் நடத்தப்பட்ட சிறப்பு கூட்டத்தில் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துகள் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளரின் முடிவு ஊராட்சி மன்றத்தின் கருத்திற்கு மாறுபட்ட நிலையில் ஊராட்சி மன்றத் தலைவரால் காலம் கடந்து சமர்ப்பித்த மறு விளக்கம் ஆகியவை உளத்தேர்வின்படி கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் கிராம ஊராட்சியின் பொது மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தருவதற்காக அரசால் ஒதுக்கப்பட்ட நிதியில் ரூ. 4,33,268/— ஊராட்சி மன்றத் தலைவரால் விரயமாக்கப்பட்டுள்ளது நிரூபணமாகியுள்ளது. எனவே, அன்னாரை மகாராஜபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து ஆணையிடப்படுகிறது.

இவ்வாணை குறித்த அறிவிக்கை 1994—ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 262 (1)—ன்படியும் சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் அரசு முதன்மை செயலர் அவர்களின் கடித ந.க. எண் 3205/ப.ரா.4/2010—1, நாள் 01—03—2010 தேதிய அறிவுரைகளின்படியும் ***தமிழ்நாடு அரசிதழில்*** சிறப்பு வெளியீடாக வெளியிடப்படும் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

**ம.சு. சண்முகம்,**
*மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்*
*ஊராட்சிகளின் ஆய்வாளர்.*

தஞ்சாவூர்,
2011 மே 17.

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.